©
தமிழ்நாடு அரசு
2010

[Regd. No. TN/CCN/467/2009-11.
[R. Dis. No. 197/2009.
[விலை: ரூ. 0.80 காசு.

# தமிழ்நாடு அரசிதழ்

ஆணையின்படி வெளியிடப்பட்டது.

எண் 32] சென்னை, புதன்கிழமை, ஆகஸ்ட் 18, 2010
ஆவணி 2, திருவள்ளுவர் ஆண்டு–2041

## பகுதி VI—பிரிவு 1இன் இணைப்பு

### துறைத் தலைவர்களுடைய அறிவிப்புகள்

**1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டம் பிரிவு 44(2) மற்றும் 44(3)(பி)–ன்படி செயல்படாத சங்கங்களை சங்கப் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்தல் பற்றிய அறிவிக்கை.**

*(எண் 2771/ஆ2/2010.)*

பாளையங்கோட்டை பதிவு மாவட்டத்தில், பதிவு செய்யப்பட்ட கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்கள் சங்கப் பதிவு சட்டம் பிரிவு 44(2)–ன்படி சங்கத்தின் செயல்பாடு குறித்து உறுதியான தகவல் ஏதும் பெறப்படாததாலும்/சங்கப் பதிவுச் சட்டம் பிரிவு 44(3)(பி)–ன்படி கடந்த மூன்று நிதியாண்டுகளில் சங்கப் பதிவு சட்டம் பிரிவு 16(3)(பி)-ன்படி பதிவாளரிடம், கோர்வை செய்ய வேண்டிய அறிக்கைகளை, கோர்வை செய்யாத காரணத்தாலும் கலைக்க உத்தேசிக்கப்பட்டு ***தமிழ்நாடு அரசிதழில்*** இவ்வறிவிக்கை பிரசுரம் செய்யப்படுகின்றது. இவ்வறிவிக்கை வெளியிடப்பட்ட நாளிலிருந்து மூன்று மாத காலங்களுக்குள் மேற்படி சங்கங்களின் செயல்பாடு குறித்து உரிய முகாந்திரம் தெரிவிக்கப்படவில்லையெனில், இச்சங்கங்களின் பெயர்கள் சங்கப் பதிவேட்டிலிருந்து நீக்கம் செய்யப்பட்டு கலைக்கப்படும் என இறுதியாக அறிவிக்கப்படுகிறது.

| வ. எண். | சங்கப் பதிவு எண். | சங்கப் பெயர் மற்றும் முகவரி |
|---|---|---|
| (1) | (2) | (3) |
| 1 | 30/02 | மனித உரிமைகள் பாதுகாப்பு சங்கம், 259, திருச்செந்தூர் ரோடு, பாளையங்கோட்டை. |
| 2 | 10/06 | நுகர்வோர் மற்றும் மனித உரிமைகள் பாதுகாப்பு கூட்டமைப்பு, 948, A12, 13–வது தெரு, ரஹ்மத் நகர், பாளையங்கோட்டை, திருநெல்வேலி–11. |
| 3 | 6/08 | தென்னிந்திய மனித உரிமைகள் பாதுகாப்பு அமைப்பு, 65, எழில் நகர் ஸ்டேட் பாங்க் காலனி, N.G.O. "A" காலனி, திருநெல்வேலி–7. |

பாளையங்கோட்டை,
2010 ஜூலை 10.

**வீ. சுந்தரம்,**
*மாவட்டப் பதிவாளர்.*

தமிழ்நாடு அரசுக்காக சென்னை எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறை இயக்குநரால்
அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.